இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 16-06-2024

# குளறுபடிகள் அம்பலம் ஆகிறது

நீட் தேர்வில் குளறுபடிகள் அம்பலம் ஆனதும், ஒன்றிய அரசு பின்வாங்கத் தொடங்கி இருக்கிறது. 1,563 மாணவர்களுக்குக் கொடுத்த கருணை மதிப்பெண்ணை ரத்து செய்யப் போகிறார்களாம். உச்சநீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறது ஒன்றிய அரசு.

**நீட் தேர்வில் இதுவரை ரகசியமாக நடந்த குளறுபடிகள், மோசடிகள், தகிடுதத்தங்கள் இந்த ஆண்டு வெளிப்படையாகவே நடந்தன. இதனை மறைப்பதற்காகத்தான் ஜூன் 14 ஆம் தேதி வர வேண்டிய தேர்வு முடிவுகளை, ஜூன் 4 ஆம் தேதி நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வரும் நாளன்று வெளியிட்டு மறைக்கப் பார்த்தார்கள். "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்பதைப் போல 'நீட் திருட்டுத் தனம்' மக்கள் மத்தியில் அம்பலம் ஆனது.**

முன் எப்போதும் இல்லாத வகையில் 67 மாணவர்கள் 720 மதிப்பெண்ணுக்கு 720 மதிப்பெண் எடுத்தார்கள். இவர்களில் 6 பேர் அரியானாமாநிலத்தில்உள்ளஒரேதேர்வுமையத்தில்தேர்வுஎழுதியவர்கள். சில குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டும் கருணை மதிப்பெண் கொடுத்துள்ளார்கள். கேட்டால், 'என்.சி.இ.ஆர்.டி. புத்தகங்களில் சில மாற்றங்கள் இருந்ததால் கொடுத்தோம்' என்று முதலில் சொன்னார்கள். 'தேர்வு மையத்துக்கு சில மாணவர்கள் தாமதமாக வந்தார்கள், அதனால் தேர்வு எழுதும் நேரத்தை இழந்தார்கள், அதனால் கருணை மதிப்பெண் வழங்கினோம்' என்று தேசிய தேர்வு முகமை காதில் பூ சுத்தியது.

**தேர்வு மையத்துக்கு ஒழுங்கான நேரத்துக்கு வர வேண்டும், வராவிட்டால் கூடுதலாக நேரம் கொடுக்கலாமே தவிர, கூடுதல் மதிப்பெண்ணா கொடுப்பார்கள்? இந்த பஞ்சமா பாதகம் எல்லாம் பா.ஜ.க. ஆட்சியில்தான் நடக்கும்.**

**கருணை மதிப்பெண்ணாக எவ்வளவு கொடுத்துள்ளார்கள் தெரியுமா? 70 முதல் 80 மதிப்பெண்கள் கொடுத்துள்ளார்கள். கருணை மதிப்பெண் பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம். ஒரு மதிப்பெண், அல்லது 2 மதிப்பெண் கொடுப்பார்கள். ஆனால் 70 மதிப்பெண், 80 மதிப்பெண்கள் எல்லாம் எப்படி கருணை மதிப்பெண் ஆகும்? மொத்தமாக மதிப்பெண் போட்டுள்ளது தேசிய தேர்வு முகமை. இதுதான் 'தேசிய' அநீதியாகும்.**

20 லட்சம் மாணவர்கள் எழுதிய தேர்வில் ஒருசில மாணவர்களுக்குச் சாதகமாக தேசிய தேர்வு முகமை நடந்து கொண்டுள்ளது. அதனைக் கண்டுகொள்ளாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் இருந்துள்ளது. நாடறிய மாட்டிக் கொண்டதும், நல்ல பிள்ளை வேஷம் போடுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

1,563 பேரின் கருணை மதிப்பெண்களை ரத்து செய்ய முடிவெடுத்துள்ளதாக உச்சநீதிமன்றத்தில் பா.ஜ.க. அரசு சொல்லி இருக்கிறது.

**உச்சநீதிமன்றத்துக்கு யாருமே கொண்டு போகவில்லை என்றால் பா.ஜ.க. அரசு இதனைச் செய்திருக்குமா? செய்திருக்காது. இத்தனை ஆண்டுகளாக நீட்தேர்வில் இப்படிப் பல மோசடிகள் நடந்துதான் வருகின்றன. அப்போதெல்லாம் பா.ஜ.க. அரசு கண்டுகொள்ளவே இல்லை. மாதம்தோறும் லட்சம் கோடிகள் சம்பாதிக்கும் பயிற்சி நிறுவனங்களின் பாதம் தாங்கிக் கிடந்தது பா.ஜ.க. அரசு. கார்ப்பரேட்டுகளின் ஆட்சியை கல்வித் துறையிலும் நிலைநாட்டிக் கண்டுகொள்ளாமல் இருந்தது பா.ஜ.க. ஆட்சி.**

தொடக்கத்தில் இருந்தே நீட் தேர்வை தமிழ்நாடு எதிர்த்து வருகிறது. தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் "நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்துவிட்டுக் காத்திருக்கிறோம். நீட் தேர்வை முழுமையாக விலக்குங்கள், அல்லது தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு தாருங்கள்" என்று கோரிக்கை வைத்துள்ளோம். இதையெல்லாம் வெறும் அரசியல் நடவடிக்கை என்று ஒதுக்கித் தள்ளியது பா.ஜ.க. அரசு.

ஆனால் இன்று, நீட் தேர்வு எழுதிய மாணவர்களே இந்த மோசடித்தனத்தை உணர்ந்துவிட்டார்கள். நீட் தேர்வு எழுதிப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். 'கடந்த மே 5 ஆம் தேதி நடந்த நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். நீட் தேர்வில் முறைகேடுகள் நடக்காமல் தடுக்க வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்' என்று அந்த மாணவர்கள் கோரிக்கை வைத்து இருந்தார்கள்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், அசானுதீன் அமானுல்லா அமர்வு முன்னால் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. "நீட் தேர்வின் புனிதத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. அதன் புனிதத் தன்மையைப் பாதுகாக்க வேண்டியது தேசிய தேர்வு முகமையின் பொறுப்பு" என்று நீதிபதிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். 'நீட் தேர்வின் புனிதத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது' என்ற சொற்கள்தான் நீட் தேர்வு குறித்த நீதிமன்றத்தின் விமர்சனம் ஆகும். இந்தப் புனிதத் தன்மையைக் கெடுத்தது யார்? என்.டி.ஏ. எனப்படும் தேசிய தேர்வுக் குழுமம். அதனை வேடிக்கை பார்த்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

ஒன்றிய அரசின் சார்பிலும், என்.டி.ஏ.சார்பிலும் ஒரே வழக்கறிஞர்தான் உச்சநீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார். இவர்கள் இருவருக்கும் எந்த வேறுபாடும், மாறுபாடும் இல்லை என்பது இதன்மூலம் விளங்குகிறது. தேசிய தேர்வுக் குழுமத்தின் முடிவுகளுக்கு ஒன்றிய அரசும் உடந்தை என்பது இதன்மூலம் தெரிகிறது. கருணை மதிப்பெண் மோசடி அம்பலம் ஆனபிறகும் அவர்கள் தவறை உணர்ந்ததாகத் தெரியவில்லை. கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஜூன் 23 ஆம் தேதி மறுதேர்வு நடத்தப் போகிறார்களாம். அதில் என்ன அரங்கேற இருக்கிறதோ? தெரியவில்லை. கோடிகளில் புரளும் கோச்சிங் சென்டர்களுக்காக என்னமா வாதிடுகிறார்கள் பாருங்கள்!

**மொத்தத்தில் நீட் தேர்வையே ரத்து செய்வதுதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வாக இருக்க முடியும். அப்போதுதான் கல்வித் துறையின் புனிதத்தன்மை காக்கப்படும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.6.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 43 மாணவ, மாணவியர்கள் தமிழ்ப் பாடத்தை ஆர்வமுடன் பயின்று நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, தலா 10 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் க. அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.6.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், அரசுப் பள்ளிகளில் 455.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,931 திறன்மிகு வகுப்பறைகளை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் க. அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை! அண்ணா அறிவாலயத்தில்

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் இல்ல மணவிழா : கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - இல.பத்மநாபன் முன்னிலை! அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து!

*சென்னை, ஜூன் 16 -*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் - திருப்பூர் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணித் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோரின் புதல்வர் எஸ்.கே.திலிபனுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஏ.எம்.ராமகிருஷ்ணன் - கே.கே.கீதா (எ) ரோஜா ஆகியோரின் புதல்வி ஆர்.ஜி.ஜனனி ஆகியோரின் மண விழா 19.6.2024 - புதன்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு, தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.*

*கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றுகிறார்.*

*மண விழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*

*மண விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*மணவிழாவில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நன்றி கூறுகிறார்.*

